## அறிமுகம்

சிங்கப்பூரில் குற்றப் புலனாய்வுகள் போலிஸாலும், பல்வேறு சட்ட அமலாக்கப் பிரிவு மேற்கொள்ளப்படுகின்றன. இந்தச் சிற்றேடு சில அடிப்படையான தகவல்களை அளிக்கிறது. அவற்றின் மூலம், காவல்துறை அல்லது மத்திய போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு, லஞ்ச ஊழல் புலனாய்வுப் பிரிவு முதலானவை ("காவல்துறை") போன்ற பிற சட்ட அமலாக்க முகமைகள் உங்களைக் ஒரு புலனாய்வில் உதவி செய்யுமாறு கேட்கும் போது, நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை அறிந்துகொள்வீர்கள்.

## புலனாய்வுகள்

- காவல்துறை உங்களின் பெயரையும் வீட்டு முகவரியையும் கேட்பதற்கு உரிமை பெற்றுள்ளது. ஒரு குற்றத்தைப் புலனாய்வு செய்யும் போது காவல்துறை எவரையும் கேள்வி கேட்கலாம். நீங்கள் இத்தகவல்களைப் காவல்துறைக்கு அளிக்கவில்லை என்றால் நீங்கள் கைது செய்யப்படலாம்.
- நீங்கள் கைது செய்யப்பட்டாலும், இல்லையென்றாலும், நீங்கள் காவல்துறைக்கு வாக்குமூலம் அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படலாம்.
- வாக்குமூலம் அளிக்கும் போது, நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டியவை:

- உங்கள் வாக்குமூலம் வழக்கமாக ஆங்கிலத்தில் எழுதப்படும். இருந்தாலும், உங்களுக்குப் புரிகின்ற மொழியில் உங்களிடம் பேட்டி எடுக்கப்படும். உங்களுக்கு மொழிபெயர்ப்பாளர் தேவைப்பட்டால், நீங்கள் கூடியவரை விரைவாக போலிஸிடம் இதை சொல்ல வேண்டும். உங்களுக்காக மொழிபெயர்ப்பாளர் ஏற்பாடு செய்யப்படலாம்.
- நீங்கள் உண்மையையே சொல்ல வேண்டும், ஆனால் நீங்கள் ஒரு குற்றவியல் குற்றச்சாட்டுக்கு ஆளாகக்கூடிய எதையும் சொல்ல வேண்டியத் தேவையில்லை.
- நீங்கள் உங்கலுக்கு எதிரன குற்ற சட்டத்திற்கு மறுப்பு தெரிவிக்க அல்லது ஏதேனும் விளக்கமளிக்க விரும்பினால், அதைப் போலிஸிடம் சொல்ல வேண்டும். மேலும், அது உங்கள் வாக்குமூலத்தில் எழுதப்பட வேண்டும். நீங்கள் அதை வாக்குமூலத்தில் சொல்லாமல், வழக்கு முதல் முறையாக நீதிமன்ற விசாரணைக்கு வரும்வரை நீங்கள் காத்திருந்தால், நீதிபதி உங்களை நம்பாமல் போகலாம்.



- உங்களது வாக்குமூலத்தில் கையெசுது போடுவதாக்கு முன்னர், அதைக் கவனமாக வாசியுங்கள். அது துல்லியமாகவும், முழுமையாகவும் இருப்பதை உறுதி செய்துகொள்ளவும்.
- உங்கள் வாக்குமூலத்தில் கையெசுது போடுவதாக்கு முன்னர் நீங்கள் அதில் மாற்றங்களைச் செய்யலாம்.
- உங்கள் வாக்குமூலத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பது உங்களுக்குப் புரியவில்லை எனில், அதை உங்களுக்கு விளக்குமாறு பதிவு செய்பவரிடம் அல்லது மொழிபெயர்ப்பாளரிடம் நீங்கள் கேட்கலாம்.
- நீங்கள் கைது செய்யப்பட்டிருந்தால், தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தால் அல்லது குற்றம் சாட்டப்பட்டிருந்தால், நீங்கள் பின்வருனவற்றைச் செய்யலாம்:
  - உங்கள் குடும்பத்தினர் அல்லது வழக்குரைஞரைத் தொலைபேசியில் அழைப்பதற்குக் கேட்கலாம்.
  - உங்கள் குடும்பத்தினர் அல்லது வழக்குரைஞர் வருகைக்காகக் கேட்கலாம்.
  - நீங்கள் தேர்வு செய்யும் ஒரு வழக்குரைஞருடன் கலந்தாலோசிக்க வேண்டும் என்று கேட்கலாம்.
  - இருந்தாலும், இத்தகைய வேண்டுகோள்கள் தங்களின் புலனாய்வுடன் குறுக்கிடும் என்று காவல்துறை நினைத்தால், அவர்கள் இவற்றை மறுக்கலாம்.
- நீங்கள் காவல்துறை நிலையத்தில் இருக்கும் போது:
  - உணவு, பானம் மற்றும் கழிவறை இடைவேளைகளுக்காக வேண்டுகோள் விடுக்கலாம்
  - நீங்கள் ஏதேனும் நேரத்தில் உடல்நலக் குறைவாக உணர்ந்தால், காவல்துறை தெரிவிக்கலாம் மற்றும் மருத்துவரைக் காண்பதற்கு வேண்டுகோள் விடுக்கலாம்.

## குற்றச்சாட்டு

- உங்கள் மீது குற்றம் சுமத்தப்படுவதற்கு முன்னர், நீங்கள் "எச்சரிக்கை வாக்குமூலம் (cautioned statement)" என்றழைக்கப்படும் வாக்குமூலத்தை அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படலாம்.

  - உங்கள் மீது சுமத்தப்படும் குற்றத்தைப் காவல்துறை உங்களுக்கு வாசித்துக் காட்டும்.
  - உங்கள் மறுப்புரையில் நீங்கள் ஏதேனும் உண்மையை அல்லது விஷயத்தைத் தெரிவிக்க விரும்பினால், நீங்கள் அதை இந்த நேரத்தில் தெரிவிக்க வேண்டும். மேலும், அது உங்களின் எச்சரிக்கை வாக்குமூலத்தில் பதிவுசெய்யப்பட வேண்டும். இல்லையெனில், அது முதல் முறையாக நீதிமன்றத்தில் மட்டும் தெரிவிக்கப்பட்டால், நீதிபதி அதை நம்பாமல் போகலாம்.
  - நீங்கள் கூற விரும்பும் **எதுவும்** எழுதிக் கொள்ளப்படும், உங்களுக்குப் புரியும் மொழியில் உங்களுக்குத் திரும்ப வாசித்துக் காட்டப்படும் மற்றும் உங்களால் கையொப்பமிடப்படும்.
  - உங்கள் வாக்குமூலத்தில் கையொப்பமிடுவதற்கு முன்னர் நீங்கள் அதில் மாற்றங்களைச் செய்யலாம்.
  - உங்கள் வாக்குமூலத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பது உங்களுக்குப் புரியவில்லை எனில், அதை உங்களுக்கு விளக்குமாறு பதிவு செய்பவரிடம் அல்லது மொழிபெயர்ப்பாளரிடம் நீங்கள் கேட்கலாம்.
  - குற்றச்சாட்டு மற்றும் எச்சரிக்கை வாக்குமூலத்தின் நகல் உங்களுக்கு அளிக்கப்படும்.

- புலன்விசாரணைகளின் போது காவல்துறை உங்களை தவறாக நடத்தப்பட்டதாக அல்லது அச்சுறுத்தப்பட்டதாக நீங்கள் உணர்ந்தால், அல்லது உங்கள் மீதான குற்றச்சாட்டுகள் அல்லது தண்டனை தொடர்பாக எந்த அதிகாரியாவது உங்களிடம் உத்திரவாதம் அளித்தால், நீங்கள் கூடியவரை விரைவாக மற்றொரு அதிகாரியிடம் புகாரளிக்க வேண்டும் அல்லது கூடியவரை விரைவாக நீதிபதி / உங்கள் வழக்குரைஞரிடம் சொல்ல வேண்டும்.

## உங்களை, உங்கள் உடைமைகளை தேடுதல்

- நீங்கள் கைது செய்யப்படும் போது, காவல்துறை கீழ்க்கண்டவற்றைத் தேடலாம்:
  - உங்களையும் உங்கள் உடைமைகளையும்;
  - ஆதாரம் இருக்கலாம் என்று காவல்துறை நம்புகின்ற எந்த இடமும் (உ.ம். உங்கள் உடைமைகள், வாகனம், கணினி, கைப்பேசி முதலானவை).
- நீங்கள் ஒரு பெண் என்றால், நீங்கள் தீவிரவாதி என சந்தேகிக்கப்பட்டாலொழிய, உங்களை மற்றொரு பெண் மட்டுமே தேடலாம் .
- தேடுதல் நடைபெறுவதைத் தொடர்ந்து, காவல்துறை ஏதேனும் பொருட்களைச் ஆதாரமாக கைப்பற்றலாம். அதற்காக உங்களிடம் ஒரு ஒப்புகைச் சீட்டு அளிக்கப்படும். வழக்கின் முடிவில், கைப்பற்றப்பட்ட பொருட்களை என்ன செய்ய வேண்டும் என்பதை நீதிமன்றம் முடிவுசெய்யும் - உ.ம். அப்பொருட்களை உங்களிடம் திருப்பிக் கொடுப்பதா அல்லது அவற்றை அகற்றுவதா என்று.

## வழக்கு தொடர்தல் / நீதிமன்றத்தில் ஆஜராதல்

- நீங்கள் கைது செய்யப்பட்ட 48 மணிநேரத்திற்குள், காவல்துறை உங்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டும் அல்லது உங்களை ஜாமினில் அல்லது நிபந்தனையின்றி விடுவிக்க வேண்டும்.
- நீங்கள் நீதிமன்றத்திற்குச் செல்லும் போது, அரசு வழக்குரைஞர் நீங்கள் கைது செய்யப்பட்ட நேரத்தில் இருந்து 48 மணிநேரத்திற்கு மேல் உங்களைச் சிறையில் அடைப்பதற்கு விண்ணப்பிக்கலாம். இருந்தாலும், காவல்துறை உங்களை ஏன் மேற்கொண்டு தடுப்புக்காவலில் வைக்க வேண்டிய தேவையுள்ளது என்பதற்கான காரணங்களை அரசு வழக்குரைஞர் நீதிமன்றத்திடம் அளிக்க வேண்டியது கட்டாயமாகும். நீங்கள் இந்தக் கோரிக்கைக்கு மறுப்பு தெரிவிக்கலாம். மேலும், நீங்கள் ஏன் மேற்கொண்டு தடுப்புக்காவலில் வைக்கப்படுகிறீர்கள் என்பதை விளக்குமாறு நீதிமன்றத்திடம் கேட்கலாம். நீங்கள் மேற்கொண்டு தடுப்புக்காவலில் வைக்கப்படலாமா என்பதை நீதிமன்றம் முடிவுசெய்யும்.
- உங்கள் குடும்பத்தைத் தொடர்புகொள்வதற்கும், ஒரு வழக்குரைஞருடன் பேசுவதற்கு அல்லது அவரை வழக்கில் ஈடுபடுத்துவதற்கான வாய்ப்புக்காகவும் கூட நீங்கள் நீதிமன்றத்திடம் அனுமதி கேட்கலாம்.

## சட்ட உதவி

உங்களுக்கு மேற்கொண்டு கேள்விகள் இருந்தால் அல்லது நீங்கள் குற்றவியல் சட்ட உதவித் திட்டத்தின் (Criminal Legal Aid Scheme, CLAS)கீழ் சட்ட உதவி பெறுவதற்காக விண்ணப்பிக்க விரும்பினால் மற்றும் உங்களின் சொந்த வழக்குரைஞரை நியமிப்பதற்கு பணவசதி இல்லை என்றால், உங்களின் குற்றப் பத்திரிகையின் நகல்கள் மற்றும் கடந்த 12 மாதங்களுக்கான உங்களின் பங்களிப்பைக் காண்பிக்கின்ற உங்கள் மத்திய சேமநிதி (CPF) அறிக்கையுடன் Pro Bono Services - இன் அலுவலகத்தைத் தொடர்புகொள்ளவும் அல்லது நேரில் வருகை தரவும்.

### Criminal Legal Aid Scheme

1 Havelock Square
State Courts Towers, B1-18
Singapore 059724

**தொலைபேசி** : 6534 1564 / **தொலைப்பிரதி** : 6534 5237
**மின்னஞ்சல்** : clas@lawsocprobono.org
**அலுவலக நேரம்:** திங்கள் முதல் வெள்ளி வரை,
காலை 9 மணி முதல் மாலை 5.45 மணி வரை

## பொறுப்புத் துறப்பு

இதில் உள்ளடங்கியுள்ள தகவல்கள், மார்ச் 2019 நிலவரப்படியான சட்டம் குறித்த பொதுவான மற்றும் அடிப்படையானத் தகவல்களை மட்டுமே எடுத்துரைக்கின்றன. இதில் உள்ளடங்கியுள்ள தகவல்கள் சிங்கப்பூர் சட்டக் கழகத்தால் பொதுநலப் பணியாக வழங்கப்பட்டுள்ளன. இவை நம்பகமானதாகவும் துல்லியமானதாகவும் நம்பப்படும் ஆதாரங்களில் இருந்து பெறப்பட்டவையாகும். இருந்தாலும் கழகமோ அல்லது அதன் பிரதிநிதிகளோ இதிலுள்ள பிழைகள் அல்லது விடுபடல்களுக்கு எந்தப் பொறுப்பும் ஏற்கவில்லை. வாசிப்பாளர்கள் தனிப்பட்ட சட்ட ஆலோசனையை நாட வேண்டும்.


**இச்சிற்றேடு, சிங்கப்பூர் சட்டக் கழகத்தின் குற்றவியல் நடைமுறைக் குழுவால் வெளியிடப்படுகிறது**


28 Maxwell Road #01-03 Maxwell Chambers Suites
Singapore 069120
**தொலைபேசி** : 6538 2500 / **தொலைப்பிரதி** : 6533 5700
**www.lawsociety.org.sg**



*பதிப்புரிமை 2019*


# Criminal Investigations

# KNOW YOUR RIGHTS



THE LAW SOCIETY OF SINGAPORE